**சுருக்கம்**

பணியமைப்பு – நகராட்சி நிர்வாக இயக்குநரகம் – பொது சுகாதாரம் – துணை இயக்குநர்(பொது சுகாதாரம்) பணியிடம் தோற்றுவித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

**அரசாணை (நிலை) எண்.107** **நாள்:27.06.2009.**

படிக்க:

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் எண்.62015/2007/OP.1, நாள் 13.11.2007.

----

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தில், உணவு கலப்பட பாதுகாப்பு மையச் சட்டத்தினை, 148 நகராட்சிகள் மற்றும் 9 மாநகராட்சிகளில் நடைமுறைபடுத்துதல், இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்தி உணவு கலப்படத்தினை கண்டறிவதில் ஒவ்வொரு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பிலும் ஏற்படும் முன்னேற்றம் குறித்து காலமுறை சீராய்வு மேற்கொள்ளுதல் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மலேரியா, பிலேரியா நோய்கள் எதிர்ப்பு நடவடிக்கை, தாய்சேய் நலம் மற்றும் குடும்ப நலத்திட்டம் போன்ற பொது சுகாதார நடவடிக்கைகளை கண்காணிப்பது துறைத் தலைவரின் கடமையாகும் எனவும், நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உள்ள இரண்டாம் நிலை அலுவலர்கள் பல்வேறு புதிய திட்டங்களை நிறைவேற்றி வருவதனால் அவர்களின் பணிச்சுமை அதிகமாக உள்ளது எனவும், எனவே, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பொது சுகாதார நலன்களை பாதுகாக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஒரு இணை இயக்குநர்/கூடுதல் இயக்குநர் (பொது சுகாதாரம்) பணியிடம் தோற்றுவிக்கப்படுவது மிக அவசியம் எனவும், இப்பணியிடம் தோற்றுவிக்கப்பட்டால் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் சீரிய முறையில் பொது சுகாதாரப் பணிகளை நிறைவேற்ற இயலும் என்றும் தெரிவித்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு ஒரு இணை இயக்குநர் / கூடுதல் இயக்குநர் (பொது சுகாதாரம்) பதவியிடத்தை ரூ.12000–375–16500/ரூ.15000–400–18600 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் முதலில் ஓராண்டிற்கு தோற்றுவிக்குமாறும், இப்பணியிடத்தில் பொது சுகாதாரத் துறையின் அலுவலர் ஒருவரை வேற்றுப்பணி அடிப்படையில் (on deputation) நியமனம் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின்னர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) என்ற பணியிடத்தினை ரூ.10000–15200 (திருத்தி அமைக்கப்படாத காலமுறை ஊதியம்) என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் ஓராண்டு காலத்திற்கு தோற்றுவித்து இப்பணியிடத்தினை பொது சுகாதாரத் துறையின் அலுவலரை வேற்றுப்பணி (deputation) அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

.2..

3. பொது சுகாதார துணை இயக்குநர் பதவிக்குரிய பணிவிதிமுறைகளை உருவாக்க செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.1111/FS(P)/09, நாள் 19.05.2009–ல் பெறப்பட்டுள்ள இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசுச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு இயக்குநர்,
எண்.359, அண்ணாசாலை, DMS வளாகம், சென்னை – 600 006.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 108.
மாநில கணக்காயர், சென்னை – 18 / 35.

<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
நிதித் துறை, சென்னை – 9.
மக்கள் நலவாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2/நப.2) துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.